1st November 1962]

* 1063 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Works be pleased to lay on the table of the House a list of schemes proposed to be undertaken during 1962–63 and 1963–64, for the control of floods in the Cauvery?

THE HON. SRI V. RAMAIAH : The report of the Special Officer who was appointed to investigate "long term measures to mitigate future floods in the Cauvery" is being examined by the Chief Engineer (Irrigation). The Flood Control Schemes to be undertaken will be decided by the Government after the recommendations of the Chief Engineer (Irrigation) are received and considered by the Government.

அரசாங்க பஸ் போக்குவரத்து (பஸ் மார்க்கங்கள்)

* 1064 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து பட்டுக்கோட்டைக்கு மாயூரம் வழியாக சர்க்கார் பஸ் விட உத்தேசமுண்டா?

(இ) அப்படியானல், எப்போது துவங்கப்படும்?

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) No, Sir.

(இ) Does not arise.

* 1065 கேள்வி.—திரு. முனு ஆதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அடையாற்றிலிருந்து, திருவான்மியூர் வழியாக திருப்போரூர் வரை செல்லும் மார்க்கத்தில், தற்போது தனியார் துறையில் இருக்கும் பஸ் போக்குவரத்தை தேசியமாக்கும் உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை, ஐயா.

* 1066 கேள்வி.—திரு முனு ஆதி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சென்னையிலிருந்து தாம்பரம் வரை, பல்லாவரம் வழியாகவும் வேளச்சேரி-மாடம்பாக்கம் வழியாகவும் அரசாங்க பஸ்கள் விடும் உத்தேசமுண்டா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இல்லை, ஐயா.

Tamil language test

* 1067 *Q.*—SRI M. WILLIAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government intend conducting Tamil test for the Malayalam Secondary School-Leaving Certificate passed students so as to enable them to secure Government jobs without language difficulty and also to enable them to get admission in Tamil training schools for teachers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No, Sir.

[1st November 1962

SRI M. WILLIAM : In view of the fact that a large number of students have passed in the Malayalam medium in the S.S.L.C. Public Examination and also in view of the fact that they are not absorbed in Government Departments for want of adequate knowledge in Tamil, is it not better to give them a chance to appear for Tamil Examination and get themselves qualified to get suitable jobs in Government service?

கனம் திரு எம். பக்தவத்சலம் : கனம் சபாநாயகர் அவர்களே, உத்தியோக விஷயத்தில் இரண்டு இருக்கின்றன. சாதாரண உத்தியோகம் என்பது ஒன்று. ஆசிரியர் உத்தியோகம் என்பது இரண்டாவது. சாதாரண உத்தியோகங்களைப் பொறுத்த வரையில், சிறுபான்மையினருக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழைத் தாய் மொழியாகக் கொள்ளாதவர்களும் பரிட்சை எழுதலாம். தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாது, மலையாளம் தெரிந்தவர்களுக்கு இதில் தடை கிடையாது. டெஸ்டில் அவர்கள் தேறிவிட்டால் போதும் ; உத்தியோகத்திற்கு அவர்கள் அருகதை உள்ளவர்களாவார்கள். ஆனால், ஆசிரியர் உத்தியோகத்தைப் பொறுத்த மட்டில், மலையாளம் சொல்லிக் கொடுக்க வேண்டிய ஆசிரியராயிருந்தால், அவர்களுக்குத் தமிழ் வேண்டியதில்லை. மலையாளத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழில் பாடம் சொல்லிக் கொடுக்கக்கூடிய ஆசிரியராக வேண்டுமென்றால், இப்பொழுதுள்ள தமிழ் ஆசிரியர்கள் போதாமலிருந்தால்தான், இந்த டெஸ்ட் அவர்களுக்கு வைக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட நிலை இப்பொழுது இல்லை. தமிழ் தெரிந்த ஆசிரியர்கள் வேண்டிய அளவு இருக்கிறார்கள். ஆகவே, மலையாளம் படித்தவர்களுக்குத் தமிழில் தனியாக ஒரு டெஸ்ட் வைக்க வேண்டிய அவசியம் இல்லை.

அரசாங்க பஸ்கள் (மாணவர்கள் சுற்றுப்பயணம்)

1068 கேள்வி.—திரு முனு ஆதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—*

(அ) 1960–61-ல் எத்தனை பள்ளிகள் எவ்வளவு நாட்களுக்கு அரசாங்க பஸ்களை தங்கள் பள்ளி மாணவர்களின் சுற்றுப் பயணத்திற்காக கேட்டுப் பெற்றன ?

(இ) இதனால் அரசாங்கத்திற்குக் கிடைத்த தொகை எவ்வளவு ?

கனம் திரு ஆர். வெங்கட்டராமன் : *(அ) 1960–61-ல் 59 பள்ளிகள் ஒன்று முதல் ஆறு நாட்கள் வரை அரசாங்க பஸ்களை தங்கள் பள்ளி மாணவர்களின் சுற்றுப் பயணத்திற்காக கேட்டுப் பெற்றன.*

(இ) ரூபாய் 17,010,62.

திரு இராம அரங்கண்ணல் : பழைய பஸ்களை விற்கும்போது அவைகளைக் குறைந்த விலைக்குக் கல்வி நிலையங்களுக்குக் கொடுக்ககூடிய சலுகை அளிக்கப்படுமா ?